# வாழ்க்கையில் திருப்பங்கள் தரும் திருப்போரூர் பதிகம்

சிவத்தமிழ் குகமணி தெ. தனபால்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526

தமிழகத்தில் உள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கும் ஒரு தலம் தான் திருப்போரூர் ஆகும். இத்தலத்தில் மங்காத புகழ் பெற்று விளங்கிய ஞானியர், மா தவவாழ்வு வாழ்ந்த பரஞானி ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் ஆவர். இங்கு எழுந்தருளியுள்ள முருகனின் திருநாமம் கந்தசாமி ஆகும். கந்தசாமி பெருமானுக்குச் சந்நிதி முறை தந்தவர் அவருக்கு அருட்காட்சி கொடுத்து ஆட்கொண்ட பெருமான் "பூமணக்கும் சோலைப் புகழ் மணக்கும் போரூரின் செவ்வேள் கந்தப்பெருமானே''! ஆம் திருப்போரூர் என்றவுடன் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் பெயர் நினைவுக்கு வரும். அவரது திப்போரூர்ச் சந்நிதி முறை அவர்கள் அமைத்த மிகப்பெரிய கோயில் என்றும் வற்றாத திருக்குளம் என அடுக்கடுக்காகத் திருப்போரூர் நம் எண்ணத்திலே தோன்றச் செய்யும்.

உள்ளம் உருக வரும் ஒண் போரூர் ஐயன் அருள் வெள்ளம் நம்மை நோக்கிப் பாய்கிறது. "**ஏது பிழை செய்தாலும் ஏழையேனுக்கு இரங்கித் தீது புரியாத அத்தெய்வம் நீதி தழைக்கின்ற போரூரில்**" என்று பாடி அருளிய முனிவர் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் படம் மண்டபத்தில் இருக்க, எண்ணிய எண்ணியவாறே நமக்கருள் தண்ணளி மாமுகிலாகி நிற்கிறான் கந்தசாமிப் பெருமான். பெருமான் விரும்பி உறையும் அந்தப் புனிதத் தலத்துக்குத்தான் எத்தனை பெருமை பாருங்கள்.

**உள்ளம் உருக வரும் ஒண் போரூர்**
**உள்ளும் புறமும் ஒளிவீசும் போரூர்**
**எண்ணுந்தோறும் உள்ளம் இன்புறும் போரூர்**
**கற்பக நிழற் கொடுத்த அற்புதப் போரூர்**
**புனைமதில் சூழ் போரூர்**
**பொங்கி மணக்கும் இன்பப் போரூர்**
**மட்டழகார் சோலை மலிந்த திருப்போரூர்**
**நாயேன் இடர்களைந்து நல்லருளூட்டும் போரூர்**
**தஞ்சமெனப் பணிவோர்க் கருள்தரும் போரூர்**
**தலைமைகொள் தவத்தோர் நிலவிய போரூர்**

தவமகிழ் தருபுகழ் பெருகிய சமரப்பதி என்று இப்படியெல்லாம் போரூரின் புகழைப் பேசிக்கொண்டே போகலாம்!.

போதன் மாதவன் மாதுமை பாதி ஆதியுமே தொழு போரி மாநகர் மேவிய பெருமானைச் சந்தக்கடல் அருணகிரியார் "சகல லோகமும் மாசறு சகல வேதமுமே தொழு சமரமாபுரி" என்று போற்றுகிறார். முருகப்பெருமான் விரும்பி உறையும் மூன்று பதிகளைப் பற்றி அவர் திருத்தணிகைத் திருப்புகழில்

"கொந்துவார் குர(வு) **அடி**யினும்
அடியவர் சிந்தை வாரிஜ **நடு**வினும்
நெறிபல கொண்ட வேதநன் **முடி**யினும்
மருவிய குருநாதா

என்று குறிப்பிடுவார். ஆம்! அவன் விரும்பி உறையும் **அடி, நடு, முடி** மூன்றும் அற்புதமான பதிகள். குரவு அடி என்னும் குராவடி அதாவது குரா மரத்தின் அடி என்று **திருவிடைக்கழியையும்,** அடியவர்களது மனத்தாமரையாகிய நடு என்று "சந்ததமும் அடியார்கள் சிந்தையது குடியான தண்சிறுவை என்னும் **சிறுவாபுரித் தலத்தையும்,** வேதத்தின் உச்சி என்று "சகல வேதமுமே தொழு சமரமாபுரியாகிய திருப்போரூரையும் காட்டுகிறார் என்று அறியும் போது **திருப்போரூரின்** பெருமைதான் என்னே!.

"வெளியே ஒளியே வியனறிவே
**வேத நாவின் முடிமணியே**
அளியார் அமிர்தே போரூரா'' என்று

சிதம்பரசுவாமிகளும் வேதத்தின் உச்சியாகக் கந்தசாமியைப் போற்றுகின்றார்.

அந்தப் போரூர் இறைவன் புகழைப் பேசுவதற்கும், அவன் அருளை நாடவும் மேலும் நமக்கு பல நல்ல திருப்பங்களை வாழ்க்கையில் பெறுவதற்காக தமிழ் மண்ணிலே அவதரித்து, உலகமக்களுக்கும், ஆன்மிகத்திற்கும் பெருமை சேர்ந்த மா ஞானியருள் ஒருவர் மனிதனாகப் பிறந்து, நம்மிடையே வாழ்ந்து, குக பரமேஸ்வரன் ஒருவனையே ஏக தெய்வமாக வழிபட்டு, முருகனின் மீது 6666 பாடல்களை அருளியவர். 19ஆம் நூற்றாண்டிலே தோன்றியவர் ஞானியாக நம்முடன் வாழ்ந்து, இப்போது மரணமில்லாப் பெருவாழ்வு பெற்று குகசாயுச்சிய நிலையில் இருப்பவர். மகான்கள் வாழ்ந்த இந்த சென்னை மாநகரத்தில், திருவான்மியூர் ஜீவஜோதியாக இருந்து அருள்பாலிக்கின்ற ஞானி, அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் ஆவார். இவர்கள் அருளிய பாடல்களில், மனித உயிர்கள் எப்படியாகிலும், முருகனின் திருவருளைப் பெறவேண்டும் என்ற தன்னலமற்ற



தியாகத்தினால் நமக்கு பல நல்ல போதனைகளைக் கூறியுள்ளார்கள். பாடல்களைப் பாடும் போதும், அவற்றைப் படிக்கும் போதும், நம் சிற்றறிவுக்கு எட்டாத பல போதனைகளையும், உவமைச் சிறப்புகளையும் முருகனின் மெய்யடியார்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் முனைவர் ப. இராமன் அவர்கள் இப்பதிகத்ததிற்கு விளக்கம் தந்துள்ளார்கள். ஆகையால் இக்கட்டுரையை உங்களுக்கு அளிக்கிறேன்.

போரி, போரி மாநகர், திருப்போரூர், யுத்தபுரி சமரபுரி, சமரப்பதி என்று பல பெயர்களைக் கொண்ட இத்தலம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் சென்னையிலிருந்து மகாப்பலிபுரம் செல்லும் வழியில் 42 ஆவது கிலோமீட்டரில் உள்ளது. முருகன் அசுரர்களை எதிர்த்து. மூன்று இடங்களில் போர் புரிந்தான், கடலிலே போர் புரிந்த தலம் நிலத்திலே போர் புரிந்த இடம் திருப்பரங்குன்றம். விண்ணிலே போர் புரிந்த தலம் திருப்போரூர். மாயை அடக்கிய இடம் திருச்செந்தூர். கன்மம் அடக்கிய இடம் திருப்பரங்குன்றம். ஆணவம் அடக்கிய இடம் திருப்போரூர். பிரார்த்தனையினாலே கன்மத்தை அடக்கிவிடலாம். ஞானபண்டிதன் திருவருளால் ஆணவத்தை அழித்துவிட முடியும். அசுரர்களின் ஆணவத்தை அழித்து ஞானம் அளித்த தலம் திருப்போரூர்.

'பாம்பன்' ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளிய திருவலங்கல் திரட்டு-முதற்கண்டம்- இசைத்தமிழ் (இரண்டாம் மண்டலம்) 50 ஆவது பாடல் - **திருப்போரூர்** கலியுகம் 5002 சார்வரி (1900) ஆவணி மாதம் 22 ஆம் தேதி குருவாரம் அன்று இயற்றப்பட்டது. பாடல் - திருப்போரூர். பண் - சீகாமரம் தேவாரப்பண் - இராகம் - நாதநாமக்கிரியா. தாளம் - ஆதி

**சொல்வி லாசம றாத நான்மறை**
**தூய சோதியென் றோது மாகதி**
**நல்கி யாளவெனு ணட மாட வாவரிய**
**கல்வி கேள்வியி னால வாவலி**
**காதி மேலடி பாடு மாதமிழ்ச்**
**செல்வர் நாயகனே திருப் போரூ ரம்மானே.**

அரிய கல்வி கேள்வியினால் தங்கள் ஆசை எனும் நோயை ஒழித்து உன் திருவடியைப் பாடும் பெரிய தமிழ்ப் புலமையோர் தம் தலைவனே! திருப்போரூர் அம்மானே! சொல்லழகு நீங்காத நான்கு வேதங்கள் தூய பேரொளி என்று கூறும் பெரிய கதியை அளித்தருள் அடிமை கொள்ள என் மனத்துள் நடனம் ஆட வருவாயாக.

**மூவர் சூழ்முத லாய வோர்சிவன்**
**மூல வோமுரு கோனென் றானதை**
**யாவர் தாமறிவா ரடி யார லாமலுயர்**
**நாவர் பாடுன தேசி லாவடி**
**ஞான மீகுதி கானல் வேலவ**
**தேவர் நாயகனே திருப் போரூ ரம்மானே.**

பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரும் சிந்திக்கும் முதல்வன் ஆன ஒரு சிவன் எனும் மூலமான ஓங்காரமே! முருகன் என் மெய்யடியார் அல்லாமல் யார்தாம் அறிவர்? ஒளி வீசுகின்ற வேல் இறைவனே! தேவர்கள் தம் தலைவனே! திருப்போரூர் அம்மானே! உயர்ந்த புலவர் பாடும் உனது குற்றமில்லாத திருவடி ஞானத்தை அளித்தருள்வாயாக.

**பாட்டி லேபுக மேழை யேன்மிடி**
**பாற வோரருள் கூர்தி மாமலை**
**ஆட்டி காதலனே யற வோர்சி காமணியே**
**நாட்டு மூடரு மாரி போலிசை**
**பாட வேயவர் நாவி லேவரி**
**தீட்டு நாயகனே திருப் போரூ ரம்மானே.**

பெரிய இமயமலையைச் சேர்ந்த உமையம்மையின் புதல்வனே! புண்ணியர்தம் சிகாமணியே! நாட்டுப்புறத்திலும் மூடர்களும் மழைபோல் இசைபொழிய அவர் நாவில் எழுதுகின்ற தலைவனே! திருப்போரூர் அம்மானே! பாட்டினால் உன்னைப் புகழ்கின்ற இந்த ஏழையின் துன்பம் ஒழிய ஒப்பற்ற அருளை அளித்தருள்வாயாக.

**கருப்பு காநிலை கூட வேயிரு**
**காலை யேகரு தேழை யேனொரு**
**விருப்பு மேன்மையுற விரை யார்ப தந்தாராய்**
**இருப்பு மாதவ ரீச னேகும**
**ரேச னேயடி சேரு மாறுயிர்**
**திருப்பு நாயகனே திருப்போரூ ரம்மானே.**

இருக்கையில் உள்ள பெரிய தவத்தோர் தம் ஈசனே! குமரேசனே! உன் திருவடியைச் சேருமாறு உயிர்களைத் திருப்பும் தலைவனே! திருப்போரூர் அம்மானே! தாயின் கருப்பையுள் புகாதநிலை கூடுவதற்காகவே உன்னுடைய இரண்டு திருவடிகளையும் நினைக்கும் அறிவில்லாதவன் ஒரு மேன்மை அடைய மணம் நிறைந்த உன்னுடைய திருவடிகளைத் தருவாயாக.

**மாண்டு சூதக மேவு பாசறை**
**மாற வேறினை யேழை யேனனி**
**வேண்டும் மீசுரனே விரை யார்ப தந்தாராய்**
**ஆண்டு சேர்மதி வார மோரையி**
**லாத பூரண வாசி லாவுயிர்**
**தீண்டு நாயகனே திருப் போரூ ரம்மானே.**

ஆண்டும், அதைச் சேர்ந்த மாதமும் வாரமும் இராசியும் இல்லாத பூரணனே! குற்றம் இல்லாத உயிர்களைச் சேரும் தலைவனே! திருப்போரூர் அம்மானே! இறந்து பின்பு பிறப்பைப் பொருந்தும் பாசறை மாறுவதற்காகவே உன்னை அறிவிலாத நான் நன்கு துதிக்கும் கடவுளே! உன் மணம் கமழும் திருவடிகளைத் தருவாயாக.

**சீரு லாமடி சேர வேயரு**
**வேட னேயெனு மேழை யேனுளம்**
**ஒரு மீசுரனே யெனக் கோகை யோடருளாய்**
**ஏரு லாமயி லீச கானவ**
**ரேழை பூவணி யேறு தோளது**
**சேரு நாயனே திருப் போரூ ரம்மானே.**

அழகு விளங்கும் வேலிறைவனே! வன வேடர் தம் மகளான வள்ளியம்மையின் அழகிய ஆபரணங்கள் அணியப் பெற்ற தோள்களைத் தழுவும் தலைவனே! திருப்போரூர் அம்மானே! சிறப்பு விளங்கும் உன் திருவடியைச் சேரவே அருளும் கடவுளே! என்று துதிக்கும் அறிவில்லாத என் உள்ளத்தை அறியும் கடவுளே! எனக்கு மகிழ்வுடன் அருள்புரிவாயாக.

**புருட னானதுன் பால தாகவெ**
**னானி னைந்திடு போத னேனகக்**

**குருடு தானறவே யருள் கூரி ளங்கோவே**
**முருட ஞூரிடை யோரி ராவெழின்**
**மூல நாகனே மான மானினைத்**
**திருடு நாயகனே திருப் போரூ ரம்மானே.....7**

இளவரசனே! வேடர்கள் உடைய ஊர் இடைச் சென்று ஓர் இரவில் அழகிய மூலமுதலான பெண் ஆன வள்ளியம்மையைத் திருடிய தலைவனே! திருப்போரூர் அம்மானே! புருடன் என்னும் ஆன்மா உன்னிடம் உள்ளது என்று நினைத்திடும் அறிஞன் ஆகிய என் உள்ளக் குருடு ஒழிய அருள்புரிவாயாக.

**குறுக்க நீடலி லாவு னேரருள்**
**கோட லேகதி யாமெ னாநினை**
**சிறுக்க னேனைவிடா தடி சேரி ளங்கோவே**
**நறுக்கொ ணாவுர னால றாவயி**
**னாத காவென வோது வார்வினை**
**செறுக்கு நாயகனே திருப் போரூ ரம்மானே....8**

இளவரசனே! துண்டிக்க முடியாத வலிமையினால் என்றும் அழியாதுள்ள வேற்படை ஏந்திய தலைவனே! காத்தருள்வாயாக எனக் கூறுவாரின் வினைகளை ஒழிக்கும் தலைவனே! திருப்போரூர் அம்மானே! குறுகுதலும் நீளுதலும் இல்லாமல் என்றும் ஒரு தன்மையாகவே உள்ள உன் அழகிய அருளைக் கொள்ளுதலே கதி என்று நினைக்கும் இந்தக் குறை உடையவனை விட்டுவிடாது உனது திருவடியில் சேர்த்தருள்வாயாக.

**நீர்க்கு ளேதிரி வாளை பாய்விரி**
**தாழை நீள்கமு கோதி சூழ்வளம்**
**ஆர்க்கும் வேதகிரி யர னார்தி ருச்சேயே**
**பார்க்கு ளேதிரி யேழை யேன்வினை**
**பாற வேயருள் பாடு வார்துயர்**
**தீர்க்கு நாயகனே திருப் போரூ ரம்மானே.**

உன்னைப் புகழ்ந்து பாடுகின்றவர் துன்பத்தைத் தீர்க்கும் தலைவனே! திருப்போரூர் அம்மானே! நீருக்குள் திரிகின்ற வாளைமீன்கள் பாய்கின்ற அகன்ற தாழைகளும், உயர்ந்த பாக்கு மரங்களும், மலையும் சூழ்ந்த வளம் நிறைந்திருக்கும் வேதகிரியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானாரின் அழகிய புதல்வனே! இவ்வுலகில் அலைந்து திரியும் அறிவிலா என் வினைகள் ஒழிய அருள்புரிவாயாக.

**பொய்த வாவுரை யேனை மேனிலை**
**போக வேயருள் கூர்தென் மாகவி**
**பெய்த ஞானிவெளிப் பெய ரானு ளத்தேவே**
**பைத லாலிரு தேவர் தேடிய**
**பார மாதிரப் பேரன் மாதுதி**
**செய்த நாயகனே திருப் போரூ ரம்மனே.**

அழகிய பெரிய கவி பாடியருளிய (திருப்போரூர் சந்நிதி முறை) சிதம்பர சுவாமிகள் திருவுள்ளத்தில் எழுந்தருளிய கடவுளே! துன்பத்துடன் திருமாலும் பிரமதேவனும் தேடிய பெரிய மலையின் பெயருடையவன் எனக் கூறப்படும் அருணகிரிநாதன் பெரிய துதி செய்த தலைவனே! திருப்போரூர் அம்மானே! பொய்யை நீக்காத சொல்லுடைய என்னை மேலான நிலைக்குச் செல்ல அருள்புரிவாயாக.

முருகன் அடியார்கள் இப்பாடலைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற அவா இருந்தால் மேற்குறிப்பிட்ட வலைத் தளத்தில் "சுவாமிகள் அருளியவை" என்ற தலைப்பில் சென்றால் உங்கள் கணினி உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கும்.

"பதிகம் பாடுவோம் வாழ்க்கையில் திருப்பம் வரும்"



# ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

**சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :**

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**